# தவக்காலம் இரண்டாம் வார ஞாயிறு

திருவழிப்பாட்டு ஆண்டு C (24-02-2013)

## திருப்பலி முன்னுரை:

திருமகன் இயேசுவில் அன்புள்ளம் கொண்டு தவக்கால பக்திமுயற்சிகளில் ஈடுபடும் அன்பின் சொந்தங்களுக்கு என் அன்பான வாழ்த்துக்களைக் கூறி தவக்காலம் இரண்டாம் வார ஞாயிறு வழிபாட்டில் பங்கேற்க அன்பு அழைப்பை விடுக்கிறேன்.

இன்று நாம் இயேசுவின் உருமாற்ற விழாவைக் கொண்டாடுகிறோம். இயேசுவின் வாழ்வில் நிகழ்ந்த ஒரு வித்தியாசமான நிகழ்வு இது. தம் சீடர்களில் மிகவும் நெருக்கமான மூவரை மட்டும் அழைத்துக்கொண்டு மலையேறும் இயேசு அங்கே செபிக்கிறார். செபிக்கும்போதே அவரது தோற்றம் மாறுகிறது. அவரது மனித சாயல் மறைந்து, இறைச் சாயல் வெளிப்படுகிறது. அவரது ஆடை வெண்ணிறத்தில் ஜொலிக்கிறது. விண்ணகக் காட்சியாக அது மாறுகிறது.

பழைய ஏற்பாட்டின் இரு பெரும் தூண்களான மோசேயும், எலியாவும் தோன்றி அவருடன் உரையாடுகிறார்கள். ஒரு மேகம் வந்து அவர்களைச் சூழ்கிறது. “இவரே என் மைந்தர்“ என்று ஒரு குரல் விண்ணிலிருந்து ஒலிக்கிறது. இதுதான் இயேசுவின் உருமாற்ற நிகழ்வு.

எதற்காக இயேசு தோற்றம் மாறினார்? இந்த நிகழ்வின் தாக்கம் என்ன? என்பதுதான் நாம் சிந்திக்க வேண்டிய கேள்விகள்.

1. இயேசு உண்மையிலேயே இறைமகன், தந்தை இறைவனால் அனுப்பப்பட்டவர் என்பதை இந்த நிகழ்வு எண்பிக்கிறது. எனவே, அவரது சீடர்களின் நம்பிக்கை ஆழப்படுவதற்காக இந்த உருமாற்றம் நிகழ்ந்தது.

2. இத்தனை மாட்சிமை நிறைந்த இறைமகனாம் இயேசு தந்தையின் விருப்பப்படி சிலுவைச் சாவை ஏற்க வேண்டும் என்பதை சீடர்கள் புரிந்துகொள்ளவேண்டும் என்பதற்காகவும் இந்த நிகழ்வு ஏற்பட்டது.

3. மாட்சியும், துன்பமும், பாராட்டும்-அவமானமும் மானிட வாழ்வு என்னும் நாணயத்தின் இரு பக்கங்கள் என்பதையும் இது எடுத்துச்சொல்கிறது.

இத்தகைய உணர்வுகளோடு இன்று இத் திருப்பலியில் பலிப்பொருட்களோடு ஒன்றித்து நம்மையே ஆண்டவருக்கு ஒப்புக்கொடுப்போம். அங்கே வேற்றுரு கொண்டவராய் அப்பத்தில் இரசத்தில் தன்னையே நமக்கு வழங்கும் இயேசுவுடன் இணைந்து நாம் அனைவரும் இயேசுவின் ஓருடலாய் மாறுவோம். இந்த திருப்பலியில் பங்கேற்போம்.

# விசுவாசிகள் மன்றாட்டுகள்:

**பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைத் தயவாய் கேட்டருளும்.**

**இறைவாக்கினரைத் தேர்ந்தெடுத்து அனுப்பும் தந்தையே இறைவா!**

நீர் இவ்வுலகில் எமக்கு இறைவாக்குரைத்துப் பணிசெய்யத் தந்திருக்கும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவிகள், பொதுநிலைப் பணியாளர்கள் அனைவரும் தம்மை வந்தடையும் எல்லாவித சோதனைகளையும் வென்று, இறைமக்களை மனமாற்றத்திற்கு இட்டுச் செல்லும் பணியை இக்காலத்தில் சிறப்பாக முன்னெடுத்துச் செல்லுவதற்கு வேண்டிய வலிமையும், சக்தியும், மனப்பக்குவமும் பெற்று செயற்படுவதற்கு, ஞான ஒளியை அவர்களுக்கு அளித்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**தெய்வீக மாட்சி மிக்க ஆண்டவர் இயேசுவே இறைவா,**

உம்மைப் போற்றுகிறோம். உமது மாட்சியை நீர் விட்டுவிடாமல், உம்மையே தாழ்த்தி சிலுவைச் சாவை ஏற்றுக்கொண்டீரே, உமக்கு நன்றி. எங்கள் வாழ்வில் நாங்கள் சந்திக்கும் சிலுவைகளை ஏற்றுக்கொள்ள ஆற்றல் தந்தருள இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**கடவுள் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருப்பானாக என்ற ஆசீரோடு குடும்ப உறவை உருவாக்கிய அன்புத் தந்தையே இறைவா!**

எமது குடும்பங்களுக்காக உம்மிடம் வருகின்றோம். இன்றைய நாட்களில் குடும்ப உறவுக்கும் ஒற்றுமைக்கும் மகிழ்ச்சிக்கும் தடையாக இருக்கும் அனைத்துத் தீமைகளையும் உமது இரக்கத்தால் தகர்த்தெறிந்து குடும்பங்களில் அமைதியும் மகிழ்ச்சியும் ஒற்றுமையும் நிலவ வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**கருணையும் இரக்கமும் நிறைந்த தந்தையே!**

நோயினால் வாடுவோர், தனிமையில் இருப்போர், கவலையினாலும் துன்பங்களினாலும் கலங்குவோர், தேவையில் உழல்வோர், அடிமைத்தனத்துள் வாழ்வோர் அனைவரையும் உமது கருணையினாலும், இரக்கத்தினாலும் நிறைத்து அவர்கள் அனைவருக்கும் ஆறுதலையும் , நிம்மதியையும் அளித்துக் காத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**அன்புத் தந்தையே இறைவா!**

நீர் எமக்குக் கொடுத்துள்ள மக்கள் செல்வங்களுக்காக உமக்கு நன்றி கூறுகின்றோம். அவர்கள் இதுவே தகுந்த காலம், இன்றே மீட்பின் நாள் என்னும் இறைவெளிப்பாட்டை தம் உள்ளத்தில் ஆழமாகப் பதித்து: இக்காலத்தை உம்மையே தேடி நேசிப்பதிலும், உமது வார்த்தைக்கு ஆர்வத்துடன் செவிமடுத்து வாழுவதிலும் தங்கள் கவனத்தைச் செலுத்தவும் உமக்குகந்த பிள்ளைகளாக வாழவும், செயற்படவும் அவர்களை ஆசீர்வதித்து வழிப்படுத்தியருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**எங்களை உமது மாட்சியின் பங்குதாரர்களாக அழைக்கும் ஆண்டவரே,**

உம்மைப் போற்றுகிறோம். உமது சாயலாகப் படைக்கப்பட்டிருக்கும் நாங்கள் எங்களது உண்மையான சாயலை, மாட்சியைக் கண்டுகொள்ளும் அனுபவங்களை எங்களுக்குத் தாரும். இத்தவக்காலத்தில் நாங்கள் செபத்திலும், தவ முயற்சிகளிலும் உம்மோடு ஒன்றித்து, உரு மாற வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.